# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2003, நவெம்பர் மாதம் 14 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 4.50**

## 2003 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டின் நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ–ஓ 17/97
4736

### 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :– 1975 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) பந்தி (ஏ) இல் "அத்துடன்" என்ற சொல்லை நீக்கி விடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) பந்தி (ஓ) வை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :–

"(ஔ) பெருந்தோட்ட முகாமையில் முதலீட்டை மேம்படுத்தல்,

(க) பெருந்தோட்டங்களும், பெருந்தோட்ட முகாமையும் தொடர்பான தரவைச் சேகரித் தலையும் பரப்புதலையும் பொறுப்பேற்றல், அத்துடன் பெருந்தோட்டங்களின் அபி விருத்தி வாய்ப்புக்களை நிச்சயிப்பதற்கென ஆராய்ச்சியை நடாத்தல் ; அத்துடன்

2 –H 019156 – 1,250 (2003/07)

(ங) பெருந்தோட்ட முகாமை தொடர்பில் தோதான கொள்கை கள் பற்றி அமைச்சருக்கு மதியுரை யளிக்கலாம், அத்துடன் இயைபான வேறு முகவர் நிலையங்களுடன் ஒத்துழைத்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தியோராம் ஆண்டின் 76 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

"(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலா கப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) நிறுவகம் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளுநர் சபையொன்றை உடையதாயிருத்தல் வேண்டும் ; அது பின்வருவோ ரைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :—

(i) தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகத்தில் பணிப்பாளராக அப் போதைக்குப் பதவி வகிக்கின்றவ ரான ஆள் ;

(ii) 1993ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தில் பணிப்பாள ராக அப்போதைக்குப் பதவி வகிக் கின்றவரான ஆள் ;

(iii) இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தில் பணிப்பாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கின்றவரான ஆள் ;

(iv) தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தில் அப் போதைக்குப் பணிப்பாளராகப் பதவி வகிக்கின்றவரான ஆள் ; அத்துடன்

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் பெயர் குறித்த நியமன உறுப்பினர்கள் ; அதாவது —

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அத்தகைய அதிகாரசபையின் பிரதிநிதியொருவர் ;

(ii) (291 ஆம் அத்தியாயமான) இலங்கைத் தோட்டத்துரைமார் சங்கக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தோட்டதுரைமார் சங்கத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய சங்கத்தின் பிரதிநிதியொருவர் ;

(iii) பெருந்தோட்ட கைத்தொழில்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சின் பிரதிநிதிகள் இருவர்;

(iv) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால், தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளைக்கல் மீது தெரிவு செய்யப்பட வேண்டிய தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈருறுப்பினர்கள் ;

இவ்வுட்பந்தியின் நோக்கத்திற்காக தொழிற்சங்கம் என்பது தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 138) உள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(v) *நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள, அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச் சின் பிரதிநிதியொருவர் ;*

(vi) *தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந் தாலோசனையுடன் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ;*

(vii) *தனியார் தேயிலைத் தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் கழகத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ;*

(viii) *2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, துருசவிய நிதியச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட துருசவியச் சங்கங் களின் பிரதிநிதியொருவர் ;*

(ix) *தெங்கு வளர்ப்போர் சங்கத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அச் சங்கத்தின் உறுப்பினரொருவர் ;".*

*(2) அப்பிரிவின் (2) உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதி லாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—*

*"(2)(அ) அமைச்சர், சபையின் நியமிக்கப்பட்ட உறுப் பினர்களுள் இருந்து தவிசாளரொருவரை நியமித்தல் வேண்டும் ;*

*(ஆ) தவிசாளர், அமைச்சருக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம் ;*

(இ) அமைச்சர், குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம் ;

(ஈ) பந்திகள் (ஆ) மற்றும் (இ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக் காலம், அவர் சபையில் உறுப்பினராகவிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(1) அமைச்சரானவர், 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரை, அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் கருதுவாரெனின், அதற்கான காரணத்தைக் குறித்தொதுக்கி கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அவ்வாறு செய்யலாம் ;

எவ்வாறாயினும், (ஆ) என்னும் பந்தியின் (iv) என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் மட்டுமே அகற்றப்படுதல் வேண்டும்." .

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 30அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"*ஒழுங்கு விதிகள்.*

30அ. (1) சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதி அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறான திகதியில் வலுவுக்கு வருதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்கு விதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

*நிலை பெயர்கால ஏற்பாடு.*

**7.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகித்துவருகின்ற ஆளுநர் சபையின் உறுப்பினர்கள், இச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆளுநர் சபையானது மீள அமைத்துருவாக்கப்படும் வரையிலான அத்தகைய காலத்திற்கு அத்தகைய பதவிகளில் தொடர்ந்தும் இருத்தல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**8.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்